1973 ஏப்ரல் 5]

இந்தத் திட்டத்தைச் சீக்கிரமாகத் துவக்குவதற்கும், செக்கம் பட்டிக்கும் இதை விஸ்தரிப்பதற்கும் தக்க ஏற்பாடு செய்யப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது இந்த ஆண்டிப்பட்டி குடி தண்ணீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் அதன்மூலம் 14 கிராமங்கள் பயன் அடைகின்றன. குன்னூர், அரப்படிதேவன்பட்டி, கல்லுப்பட்டி, பிராதுகாரன்பட்டி, கதிரப்ப கவுண்டன்பட்டி, திம்மலாபுரம், முத்தனம்பள்ளி, மலையாண்டிபுரம், மலையப்பட்டி, ரெங்கசமுத்திரம், ஸ்ரீரெங்கபுரம், கரிசல்பட்டி, சண்முகசுந்தரபுரம், பரயப்பட்டி ஆகிய இந்தப் பதினான்கு கிராமங்கள் பயன்பெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கிராமத்திற்கான திட்டமும் வேறு பல திட்டங்களும் விரைவில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன.

மாயூரம் மகளிர் கல்லூரிக்கான கட்டடம்

*628 வினா—திரு. என். கிட்டப்பா :

திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் அரசினர் ஞானாம்பிகை மகளிர் கல்லூரிக்கான கட்டட வேலை துவங்கப்பட்டுவிட்டதா ?

(இ) ஆம் எனில், கட்டட வேலை எப்போது முடியும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) செப்டம்பர் மாதத்தில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அதற்கான மதிப் பீட்டுத் தொகை என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ரூ. 13,35,000-க்கு ஏற்பு வழங்கப்பட்டிருக்கிறது. இத் திட்டம் சனவரித் திங்களில் துவக்கப்பட்டிருக்கிறது. செப்டம்பர் திங்களில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1973 ஏப்ரல் 5

திரு. என். கிட்டப்பா : அரசினர் மகளிர் கல்லூரிக்கு 'ஞானம்பிகை' என்னும் பெண்ணின் பெயர் இணைக்கப்பட்டிருக்கிறது. எந்த அரசினர் கல்லூரிக்கும் குறைந்தபட்சம் ஐந்து லட்சம் ரூபாய் நன்கொடை தருபவர்களுக்குத்தான் அவர்கள் குறிப்பிடுகிற பெயர் வைக்கவேண்டும் என்ற நியதி இருக்கிறது அப்படியிருக்க, ஞானம்பிகை என்ற பெயரில் வைக்கப்பட்டிருப்பதால் அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு தொகை கொடுத்திருக்கிறார்கள் என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதனுடைய முழு விவரமும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். தெரிந்திருந்தும் அவர்கள் கேட்கிறார்கள். தருமபுர ஆதீனம் இரண்டு லட்ச ரூபாய் இதற்கு உதவித் தொகை தந்து ஞானம்பிகை தெய்வத்தின் பெயரால் இந்த மகளிர் கல்லூரியை வைக்க இணங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் வேறு யாரும் தொகை ஏதும் வழங்காத நிலையில் ஐந்து லட்ச ரூபாய் தொகை அளித்தபிறகு கல்லூரியை வைத்திருக்கவேண்டும். ஆனால், ஒரு லட்சம், ஒன்றரை லட்சம் ரூபாய் தருகிற காலத்திலேயே இந்தக் கல்லூரி அங்கே துவங்கப்பட்டது தவறாகும். ஐந்து லட்ச ரூபாய் தந்தபிறகு துவங்கியிருந்தால் இந்த இடர்ப்பாடு வந்திருக்காது. தருமபுர ஆதீனம் இரண்டு லட்ச ரூபாய் தருவதாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் பேசியதின் விளைவாக அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க அந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

Auto testing Laboratory in Guindy Engineering College

* 629 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any auto-testing laboratory is functioning at the Engineering College Campus, Guindy, Madras; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ & இ) ஊர்திப் பொறியியல் ஆய்வகம் ஒன்றை 1972-ல் கிண்டி பொறியியல் கல்லூரியில் புதிதாகத் தொடங்க இவ்வரசு அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாய்வகத்தின் கட்டட வேலைகள் முடியும்தறுவாயில் உள்ளன. தவிரவும் முப்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள